# பழமைக்கு முலாம் பூசும் பக்தர்கள்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

| | | | |
|---|---|---|---|
| தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆவணி 25உ வெள்ளி | (10—9—54) | மலர்: 2 |
| இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி 26உ சனி | (11—9—54) | இதழ்: 76 |


சீட்டோ:

# பாகிஸ்தானின் புதிரான போக்கு!

## உத்திரவின்றி ஜபருல்லா கையெழுத்திட்டாராம்!

### கராச்சிக்கு வருமாறு உத்திரவு

கராச்சி, செப். 9—

மணிலாவில் கையெழுத்தான தென்கிழக்கு ஆசிய ஒப்பந்தத்தில், பாகிஸ்தான் பிரதிநிதியான ஜபருல்லாகான் கையெழுத்துப் போட்டது பாகிஸ்தானில் ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறதாம்!

ஜபருல்லாகான், பாகிஸ்தான் பிரதம மந்திரியையோ, அல்லது பாகிஸ்தான் மந்திரிசபையையோ கலந்து பேசாமல் கையெழுத்துப் போட்டுவிட்டார் என்று கூறப்படுகிறது.

ஒப்பந்தம் கையெழுத்தான விவரம் தெரிந்ததும், பாக். முதலமைச்சர் முகமது அலி, தனது மந்திரி சபையைக் கூட்டி, அதுபற்றி ஆலோசித்தார் என்று தெரிகிறது. உடன்படிக்கை விவரங்கள் பற்றி ஆலோசித்தார்களா அல்லது ஜபருல்லாகானின் அவசரச் செயல் பற்றி ஆலோசனை நடத்தினார்களா என்பது தெரியவில்லை.

நிருபர்களிடம் பேசுகையில் முகமது அலி, "கராச்சியிலுள்ள பாகிஸ்தான் சர்க்காரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டிய ஒப்பந்தம் என்கிற நிபந்தனையுடன், ஒப்பந்தத்தில் தான் கையெழுத்திட்டிருப்பதாக அயல்நாட்டு அமைச்சர் ஜபருல்லாகான் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்," என்று கூறினார்.

உடனே கராச்சிக்குத் திரும்பி வந்து, தனது அவசரமான செயலுக்குக் காரணம் காட்டுமாறு முகமது அலி, ஜபருல்லாகானைக் கேட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

"சீட்டோ ஒப்பந்தம், உலக காப்பில்லை' என்ற பயத்தை மக்கள் மனதில் அதிகரிக்கிறது," என்று பண்டித நேரு, டில்லி பத்திரிகையாளர் சங்க கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நெருக்கடியை அதிகப்படுத்தும்," என்று இந்தோனேஷிய அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

பர்மா தொழில் அமைச்சரும் தற்காலிக வெளிநாட்டமைச்சருமான யூ—கயான் நைன், 'சீட்டோ'வை எதிர்த்து, தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"மீண்டும் ஒரு உலகப் போர் நடைபெற்று, ரஷ்யா வெற்றி பெறுமானால், உலக முழுமையும் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் வந்துவிடும்; அமெரிக்கா வெற்றி பெறுமானால், உலகில், பாசிச ஆட்சி நடைபெறும்."

"ஜினிவா மாநாட்டு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும், இது,"

என்று, 'சீட்டோ' பற்றி மாஸ்கோ வானொலி ஒலிபரப்பியது.

"ஆசிய மக்களுக்கு எதிராக, ஆசிய மக்களே போர் புரிந்து மடியுமாறு செய்ய அமெரிக்காவின் ஏற்பாடு இது,"

என்று, கம்யூனிஸ்டு சீனா, 'சீட்டோ' பற்றி தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது.

பிரிட்டனும், பிரான்சும் 'சீட்டோ'வை வரவேற்று, தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கின்றன.

"மணிலாவில் கையெழுத்தான 'சீட்டோ' ஒப்பந்தம், 'பாது

★

### கொழும்பு மாநாடுகள்

இலங்கை பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், கொழும்பு அரசுகள் கூட்டமொன்று நடைபெற வேண்டுமென்றும், 'சீட்டோ' ஒப்பந்தம் கையெழுத்தாகி இருப்பதால் தென் கிழக்கு ஆசியப் பகுதியில் அமைதி ஏற்படவும், வெளியார் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் வாய்ப்பிருக்கிறதா என்பதுபற்றிக் கலந்து பேசவும் வேண்டும்," என்று குறிப்பிட்டுள்ளார்

ஒப்பந்தம் பற்றி இலங்கை என்ன கருதுகிறது என்பதை உடனே தான் கூறமுடியாதென்றும், இது பற்றி ஆலோசிக்க நேரம் வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

### டல்லஸ்—சியாங் சந்திப்பு

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ், பார்மோசாவில் தேசிய சீனத் தலைவர் சியாங்-கே-ஷேக்குடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டு டோக்கியோவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

ஆக்கிரமிப்பிலிருந்து தேசியச் சீனாவை அமெரிக்கா பாதுகாத்து வருவதாகவும், ஜனாதிபதி ஐசன் ஹோவர் சர்க்காரின் உத்தரவின் பேரில், அமெரிக்க 7-வது கடற்படை பார்மோசாவைப் பாதுகாத்து வருவதாகவும், டல்லஸ் பேட்டி ஒன்றில் கூறினார்.

### அல்ஜீரியாவில் பூமி அதிர்ச்சி

1,100 பேர் மரணம்;

அணைக்கட்டுகள் உடைந்தன

பாரிஸ், செப். 9—

அல்ஜீரியாவின் தலைநகரமான ஆர்லியன்சில், பூமி அதிர்ச்சியினால், 1,100 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிகிறது; 12 வினாடிகள் பூமி அதிர்ச்சி காணப்பட்டதாம்!

ஷோபா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இரண்டு அணைக்கட்டுகள் நாசமாயின என்று தெரிகிறது,

இதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பல சிறு அணைகள் பாழான துடன், பயிர் நிலங்களும் பாழாயின என்று குறிப்பிடப்படுகிறது.

'குவெட்மோடா' அணை, வடக்கு ஆப்பிரிக்காவிலேயே மிகப் பெரிய அணைக்கட்டு என்று தெரிகிறது.

நகர முழுமையும் அழிந்து போயிருக்கலாம் என்று இராணுவ ஒலிபரப்புச் செய்திகள் கூறுகின்றனவாம்!

இரண்டு ஓட்டல்கள், ஒரு மருத்துவ மனை, ஒரு இரயில் நிலையம் இவையனைத்தும் நாசமாயினவாம்!

ஆர்லியன்ஸ் நகரத்தை அடுத்த கிராமத்தில் இந்த பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்ட சேதம் பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லையாம்.

### டாக்டர் விசாலாட்சி — நெடுஞ்செழியன் வருகை

சென்னை, செப் 10—

அமெரிக்காவில் கல்வி பயின்று தாயகம் திரும்பும், டாக்டர் விசாலாட்சி - நெடுஞ்செழியன், M.B.B.S., M.A H., D.M.C.H., அவர்கள், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 10-9-54 வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணிக்கு விமான மூலம் வந்து சேர்கிறார்கள்.

## மக்கள் உள்ளத்தில் குழப்பம் விளைவிக்கிறார்கள்

### ஏழாண்டுக்குப் பின்னரும் விவரம் புரியவில்லை!

### தூது அனுப்புகிறார்கள் — பயனற்றது என்று பேசுகிறார்கள்!

காங்கிரசாரின் போக்கு பற்றி உத்திரப் பிரதேச மேல் சபை உறுப்பினர் வருத்தம்

### ஆளுக்கொன்று பேசும் ஆட்சியாளர்

காந்தியத்தை கல்லறைக்கு அழைத்து செல்கின்றனர்

"பண்டித நேரு அடிக்கடி கம்யூனிஸ்டு நாடுகளான ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுக்கு கலாச்சாரத் தூதுக் குழுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார். சமுதாயப் புனரமைப்பிலே கம்யூனிஸ்டுகள் கடைப்பிடிக்கும் முறைகளையும், அவர்கள் அடைந்துள்ள வெற்றிகளையும் அறிந்துவர தூதுக் குழுக்களை அனுப்புகிறார்;

"ஆனால், ராஜ்யங்களில் உள்ள முதல் அமைச்சர்களில் பெரும்பான்மையினர், அனுதினமும், தங்கள் பேச்சுக்களில், 'கம்யூனிசம் என்பது பலாத்கார முறை; நாமெல்லாம் வெறுக்கவேண்டிய ஒன்று; நாட்டிலே அது குழப்பத்தையும், அழிவையும் ஏற்படுத்த முயற்சிக்கும்,' என்று பேசி வருகிறார்கள்;

'இதுபோன்று, காங்கிரசாரிடையே காணப்படும் கருத்து வேற்றுமைகள், பொதுமக்கள் மனதிலே குழப்பத்தை உண்டுபண்ணும் நிலையில் இருக்கிறது;

"இப்படி தெளிவற்ற நிலைமை நீடிப்பதும், காங்கிரசின் நலனுக்கு என்று கூறிக்கொண்டு, தவறான முறையில் பிரச்சினைகளுக்கு விளக்கம் தருவதும் பயன் தராது என்பது நிச்சயம்."

—இவ்வாறு, உத்திரப் பிரதேச மேல் சபை உறுப்பினரான கோவிந்த சகாய் என்பவர், 'ஸ்டேட்ஸ்மென்' இதழில் எழுதியுள்ள கடிதம் ஒன்றில், காங்கிரசார் முன்னுக்குப்பின் முரணான கொள்கையைக் கடைபிடிப்பது பற்றியும், காந்தீயத்தை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது நிற்கும் போக்கு பற்றியும் கண்டித்து எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மேலும் அவர் குறிப்பிடுவதாவது:—

"காந்தீயத்தின் அனுதாபிகள் எல்லோர் உண்மையிலேயே காந்தீயம் வளர வேண்டுமென்று நம்பி காரியமாற்றுகிறார்கள் என்றால், இப்போதைய நிலையில் அவர்களது எதிர்காலத்திற்கு நம்பிக்கை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை;

"சமுதாயப் புனரமைப்பிலும், நிர்வாகத் துறையிலும் காந்தீயத்தை அமுல் செய்ய அவர்கள், எந்த முறையைக் கையாளுகிறார்கள்? சமுதாயத்திலே காணப்படும் இழிவுகளுக்கு, 'காந்தீயம்தான் தக்கதோர் மருந்து,' என்பதை சாதாரண மனிதன் உணர்ந்து ஒப்புக்கொள்ளும் வகையில் அவர்கள் உருப்படியான காரியம் எதைச் செய்திருக்கிறார்கள்?

"காந்தியார் எந்த முறையை, கொலைத்தன்மை உடையதென்றும், சாத்தான் போன்றது என்றும் விவரித்தாரோ, அந்தப் பழைய உளுத்துப்போன நிர்வாக முறையின் மூலமாகவே, காந்தீயத்தை, காங்கிரசார் இப்போது நடைமுறைக்குக் கொண்டு செல்கின்றனர்;

"காலப் போக்கில், செல்வாக்கற்றுப் போன தேவையற்ற பழைய அஸ்திவாரத்தின் மேல் அவர்கள் புதிய இந்தியாவின் சமுதாயத்தை அமைக்கிறார்கள்;

"இந்திய மண்ணுக்கும், அதன் பண்பாடுகளுக்கும் வேறுபட்டது என்று காந்தியார் கூறியுள்ள பார்லிமெண்டரி முறையில், காந்தீயத்தை ஒட்டவைக்கும் போக்கிலே காங்கிரசார் காணப்படுகின்றனர்;

"இவை எல்லாம் காந்தீயத்திற்கும் மாறுபட்ட செய்கையாகும். நேரு போன்றவர்கள் தலையிட்டு, இந்த நிலைக்குக் கழுவாய் தேட வேண்டும்;

"காங்கிரசின் உயர்ந்த படிகளில் இருக்கின்ற பலர், மக்கள் நல இராஜ்யம், ஐந்தாண்டுத் திட்டம் போன்றவைகளைப் பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ளாமலே, அவைகளுக்கு விளக்கம் தருகிறார்கள் என்பது திகைக்கச் செய்யும் செய்தியாகும்;

"சுதந்திரம் கிடைத்து ஏழு ஆண்டுகள் சென்ற பிறகும் நம்மால் ஒரே திட்டமான கொள்கையை, லட்சியத்தை உருவாக்க முடியவில்லை; சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றி அடிப்படையான விவரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை."

### 'ஒரியா' ராஜ்ய மொழியாகிறது!

ஒரிசா சட்டசபையில், 'ஒரியா'வை இராஜ்ய மொழியாக்கும் மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சட்டசபை உறுப்பினர்களில் எல்லாக் கட்சியினரும் இந்த மசோதாவை ஆதரித்தனர் என்று தெரிகிறது.

விவாதத்திற்குப் பதிலளித்து பேசுகையில் முதல் அமைச்சர் நபகிருஷ்ண சௌதிரி, "ஒரியா மொழிக்கான டைப்ரைட்டரின் கீபோர்டு'கள், தொழில் இலாகாவினால் தயாரிக்கப்படுகின்றன என்றும், அது ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் ஏராளமான டைப்ரைட்டர்கள் தயார்செய்ய டெண்டர்கள் கோரப்படும் என்றார்.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 10—9—54 வெள்ளி


# சிந்தனையற்ற போக்கு!

'ஒன்றாகச் சேர்ந்து எதிர்ப்போம்,' என்று பேசுகிறார்கள்!

'ஒன்றாகச் சேர்ந்து விடுகிறார்கள்,' என்று கூறுகிறார்கள்!

'ஒன்று சேர்ந்தால் நல்லது தானே,' என்று கேட்போரும் இருக்கிறார்கள்!

'அறிகுறிகள்கூடக் காணப்படுகிறது,' என்று கருதுவோரும் காணப்படுகிறார்கள்!

'ஒன்று சேர்த்து விடுவார்; அவர் மகா திறமைசாலி,' என்று பெருமைப்படுவோரும் இருக்கிறார்கள்!

*

சென்னையில் முதலமைச்சர் காமராசருக்கு தரப்பட்ட பாராட்டு விருந்து ஒன்றில், பலர், கனம் காமராசரின் சேவையைப் பாராட்டிப்பேசினார்கள்.

விருந்திலே பேசிய டாக்டர் வி. கே. ஜான், காமராசரின் பெருமையைப் பாராட்டிப் பேசியபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

கனம் காமராசர் சிறந்த ராஜதந்திரி என்றும், எதிர்க் கட்சிகளையெல்லாம் சாமர்த்தியமாக சமாளிக்கும் திறமை வாய்ந்தவர் என்றும், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை, விரைவில் காங்கிரசில் சேர்ந்துவிடும் என்று, தான் நம்புவதாகவும் டாக்டர் வி. கே. ஜான் பேசினாரெனத் தெரிகிறது.

காங்கிரஸ் இயக்கத்தையோ, அல்லது காமராசரையோ, அவர், நன்றாகப் பாராட்டிப் பேசட்டும்; நமக்கு அதுபற்றி ஆட்சேபணை ஏதும் கிடையாது; ஆனால், அதே நேரத்தில், 'திராவிட முன்னேற்றக் கழகம் போன்றவைகள் சீக்கிரமே காங்கிரசுடன் இணைந்துவிடும்' என்று நம்புவதாகக் குறிப்பிட்டுப் பேசுவது. விந்தையாக இருக்கிறது.

டாக்டர் ஜான் போன்று இவ்வாறு நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள்; 'நாட்டிலே ஜனநாயகம் வளர வேண்டும்,' என்று உரத்த குரலில் பேசுவார்கள்; எதிர்க் கட்சிகள் வளர வேண்டுமென்றால், பார்லிமெண்டரி ஜனநாயகம் பண்புடன் இயங்க வேண்டுமென்றால், அவைகள், சீரிய நோக்குடன் இயங்குவது மிகவும் அவசியமென்று பேசுவார்கள்.

அடுத்து, நாட்டிலே நிலவுகிற எதிர்க் கட்சிகள்—கொள்கையுடன் வளரும் கட்சிகள்—சந்தர்ப்பத்தால் தோன்றிய கட்சிகள் அனைத்தையும் ஒரு சேர மதித்து, காங்கிரசில் ஐக்கியமாகிவிடும் என்று நம்புகிறார்கள்! குயில், கோட்டானுடன் கூடி வாழுமென்று எண்ணுகிறார்கள்! குள்ளநரியுடன் புள்ளிமான் ஒரே குகையில் குடியிருக்குமென்று கருதுகிறார்கள்!

இப்படிப் பேசுவோர்—கருதுவோரெல்லாம், நாட்டு அரசியல் வாழ்விலே அதிகம் அக்கறை காட்டாதவர்கள்; அரசியல் கட்சிகளில் சேர்ந்து பணியாற்றுவது தேவையில்லை என்று கருதும் போக்குடையவர்கள்! ஆனால், நாட்டிலே, ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரசுடன் காதல் கொண்டவர்களாக நடிப்பவர்கள்!

அவர்களில் பலர் காங்கிரசின்மீது தங்களுக்கிருக்கும் காதலை வெளிப்படுத்த, எதிர்க் கட்சிகள் அனைத்தும் காங்கிரசுடன் இணைந்துவிடும் என்று நம்புவதாகப் பேசுகிறார்கள்!

எதிர்க் கட்சிகள் என்று, திராவிடத்தில் பல கட்சிகள் இயங்குகின்றன; அவைகளிலே, இன்று, திராவிடர்களின் பெரும்பான்மை மக்களால் ஆதரிக்கப்பட்டு, மக்கள் சக்தியினால் வளர்க்கப்படும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்!

இழந்துவிட்ட திருநாட்டை மீட்பதற்காக, விடுதலைப் போருக்கு இந்த நாட்டு மக்களை அழைத்துச் செல்லும் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சக்தியை, அதற்கு நாட்டு மக்கள் தருகிற ஆதரவை மறந்து, சிலர் பேசுகிறார்கள்—ஏதோ ஒன்று நடந்துவிடும் என்று நம்புகிறார்கள்!

'திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் திட்டமான கொள்கையிருக்கிறது; அந்தக் கொள்கைதான் திராவிடத்தின் எதிர்கால நல்வாழ்வை உருவாக்கத் தகுதி பெற்றது,' என்று இந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் நம்புகிறார்கள்.

உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற இழி நிலையை வளர்க்கும் சமுதாய அடிப்படையை மாற்றி, மறுமலர்ச்சி எண்ணம் கொண்ட சமுதாயம் ஒன்றை அமைத்து, உழைப்புக்கேற்ற ஊதியத்தை அளித்து, திராவிடர்களின் வாழ்வை வளமுள்ளதாக்கும் தகுதி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு என்பதை இந்த நாட்டு மக்கள் நம்புகிறார்கள்.

தனது ஜீவிய லட்சியத்திலிருந்து வழுவாது, கொள்கையை முன் வைத்து, அதன் வெற்றிக்காகத் தியாகத் தழும்புகளைப் பெற்றவர்கள், பெறுவதற்குச் சித்தமாயுள்ள வீரர்கள் நிறைந்த அமைப்பு, திராவிட முன்னேற்றக் கழகம்!

ஜனநாயகப் பண்புகளை அணிகலன்களாகப் பெற்று, அமைதியின் நம்பிக்கை கொண்டு, நாட்டு மக்கள் முன்னேற்றத்தில் கருத்தைச் செலுத்தி, தனது பாதையில் திராவிட முன்னேற்றக் கழகம் சென்று கொண்டிருக்கிறது.

இவ்வளவு வலிமை பெற்ற இயக்கம், 'விரைவிலே வந்து காங்கிரசோடு சேர்ந்து விடும்,' என்று நம்புகிறார்களாம், பலர்!

சுயநல நோக்குடன் இருந்தால், தனி மனிதனின் உயர்வுக்காக என்று இருந்தால், திட்டவட்டமான கொள்கையற்று, அவ்வப்போது நாட்டிலே ஏற்படுகிற நிலைமைகளுக்கு ஏற்ப, தங்கள் பாதையை வகுத்துக்கொள்பவர்களைக்கொண்ட கட்சிகளாய் இருந்தால், வி. கே. ஜான் போன்றவர்களின் நம்பிக்கைக்கு ஆதாரமிருக்கலாம்.

காங்கிரசின் ஆசை வார்த்தைகளில் மயங்கி, திடீரென அதனுடன் ஐக்கியமாகி விடுவோரும் இருக்கிறார்கள்.

காங்கிரஸ் விரித்த பதவி வலையில் வீழ்ந்தவர்கள் பலர் உண்டு; மக்கள், அவர்கள் யார் என்பதையும் தெரிந்துதான் இருக்கிறார்கள்.

ஜான் போன்றவர்கள் கூறுகிற ஒன்று சேரும் நம்பிக்கை, பதவி வேட்டைக்காரர்கள், அரசியல் வேடதாரிகள், அரசியல் சூதாடிகள் ஆகியவர்கள் மீது திரும்புமானால், அதிலே அர்த்தமுண்டு!

திராவிட முன்னேற்றக் கழகம், மாசு மறுவற்ற இயக்கம்; மன மயக்கம் கொண்டதல்ல; பலன் தேடி அலைவதுமல்ல.

"திராவிட நாடு பெற வேண்டும்; உலகம் வியக்க, நமது இனத்தார் வாழ்ந்த காலம் மீண்டும் இங்கே வர வேண்டும்; வட நாட்டு ஆதிக்கப் பிடிப்பிலிருந்து திராவிடர்களை மீட்க வேண்டும்; அவர்கள் வாழ்விலே ஒளி வீசுமாறு காரியமாற்ற வேண்டும்; கண்ணியத்துடன் பணியாற்ற வேண்டும்," என்பதே தி. மு. கழகத்தின் குறிக்கோள்!

கொள்கை வீரர்களைப் பார்த்து, 'சீக்கிரத்தில் வந்து விடுவார்கள்,' என்று பேசுவது, சிந்தனையற்றப் போக்கு!

அரசியல் வாழ்வின் உண்மையான இலக்கணம் எது என்பதைப் புரிந்துகொள்ளாதோரின் பொறுப்பற்றப் பேச்சு!

நாட்டின்மீதும், நாட்டு மக்களின் முன்னேற்றத்தின் மீதும் அக்கறை கொள்ளாது வாழ்வோர் கூறும் போக்கு இவை, என்பதை, மக்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்!

# விசால ஆந்திரம் கோருவோர் விபரீத ஆசை!

## சென்னை நகரம் தனி மாநிலமாக மாற்றப்பட வேண்டுமாம்!

கர்னூல், செப். 7—

சென்னை நகரையும், அதன் சுற்றுப்புறமுள்ள பல மொழிப் பகுதிகளையும் சேர்த்து ஒரு தனி மாநிலமாக மாற்றி, ஒரு 'நகர ராஜ்ய'மாக அமைக்கவும், விசால ஆந்திர மாநிலம் தேவை எனவும் கோரி, மாநில புனரமைப்புக் குழுவினரிடம் நேற்று ஆந்திர அரசாங்கம் அறிக்கை ஒன்றைத் தந்துள்ளனர் என்று தெரிகிறது.

ஆந்திர அரசாங்கம் விசால ஆந்திரம் அமைப்பதற்காகக் கோரியுள்ள பகுதிகள் பின்வருமாறு:—

**மைசூரிலிருந்து**

பெல்லாரி நகரமும், தாலுகாவும்; துங்கபத்திரா அணைக்கட்டுப் பிரதேசத்தில் அடங்கியுள்ள பகுதிகள்; கோலார் மாவட்டம் முழுதும்; பெங்களூரில் சில பகுதிகள்.

**சென்னையிலிருந்து**

சேலம் மாவட்டத்தில் உள்ள ஒசூர் தாலுகா; வ. ஆ. மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் தாலுகா; செங்கற்பட்டிலிருக்கும் பொன்னேரி தாலுகா.

**ஒரிசாவிலிருந்து**

பெர்ஹாம்பூர் உள்ளிட்ட கோராபுட், கஞ்சம் மாவட்டங்கள்.

**மத்திய பிரதேசத்திலிருந்து**

சந்தாவின் ஒரு பகுதி; இந்திராவதிக்கு தெற்கு பகுதிகள்; பாஸ்டர் மாவட்டம்.

**ஐதராபாத்திலிருந்து**

எல்லா தெலிங்கானா மாவட்டங்களும்; ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்களின் பகுதிகள்.

இவை அத்தனையும் சேர்த்து, விசால ஆந்திரம் அமைக்க, ஆந்திர அரசாங்கம் வேண்டியுள்ளது.

இது தவிர, பெல்லாரியிலிருந்து இரு தூதுக் குழு, இன்னும் மூன்றிடங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் மாநில புனரமைப்புக் குழுவைச் சந்தித்தனர் என்று தெரிகிறது.

# "கட்டாயமாக மூடியிருந்த கதவுகளைத் திறந்தோம்!"

## ரஷ்யாவில் சர்வாதிகாரிகள் இல்லை!

## சீனத் தலைவர்கள் திறமைசாலிகள்!

### பெவான் கண்ட உண்மைகள்!

ஹாங்காங், செப். 6—

"பிரிட்டன் தொழிற் கட்சி தூதுக் குழுவினர் ரஷியா, சீனா ஆகிய நாடுகளுக்குத் தந்த வருகை வெற்றிகரமாயிருந்தது;

"அந்தக் குழு, பலவந்தமாக மூடப்பட்டிருந்த கதவுகளைத் திறந்திருப்பதின் மூலம், வெற்றி பெற்றுள்ளது; தற்காலிகமாக அல்ல—நிரந்தரமாகவே, அந்த நாடுகளின் கதவுகள் திறக்கப்பட்டிருப்பதாக நான் நம்புகிறேன்," என்று தூதுக் குழுவின் ஒருவரான அனுரின் பெவான் குறிப்பிட்டார்.

"ரஷியாவில் யாரும் சர்வாதிகாரியாக இல்லை; இனியும் அநேகமாக அங்கு சர்வாதிகாரிகள் இருக்கமாட்டார்கள்; மாலென்கோவ் ரஷியாவை ஆளுகிற ஒரு குழுவின் தலைவராக மட்டுமேதான் இருக்கிறார்,"

இவ்வாறு பெவான் கூறியதாக டோக்கியோ தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் பெவான், "சீனாவின் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு, அவைகளில் ஈடுபடுவது போன்றவற்றில், சீனத் தலைவரான மா-சே-துங் போன்று, வேறு யாரும் இல்லை. அவர்ஒரு திறமை மிக்க தலைவராக விளங்குகிறார்." என்றார்.

சர்வதேசப் பிரச்னைகளில் அதிகமான பரிச்சயம் உடையவராகவும், சந்தர்ப்பம் நேரும் போது வளைந்து கொடுக்கும் மனப்பான்மையுடையவராகவும், சீனப் பிரதமர் சௌ-என்-லாய் விளங்குகிறார்.

மேலும் அவர், "ரஷ்ய, சீனத் தலைவர்கள் உண்மையாகவே சமாதானத்தை விரும்புகிறார்களா இல்லையா என்பதுபற்றி நான் கவலைப்படவில்லை; ஆனால், அவர்களை நிறைவேற்ற முயற்சிக்

(4-ம் பக்கம் பார்க்க)

# ஆசியாவின் அமைதிக்கு எதிராகச் சதி!

## ஜப்பான் சர்க்கார் மீது குற்றச்சாட்டு

### இடதுசாரி சோஷலிஸ்டுகள் கருத்து

ஜப்பான் இடதுசாரி சோஷலிஸ்ட் கட்சியின் தலைவரான மோசபூரோ, அண்மையில் ஜப்பானுக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் தூதுக் குழுவினரிடம், தற்போது ஜப்பான் பிரதமராக இருக்கும் யோஷிடா சர்க்கார் அரசியல் விரோதமான கொள்கையைக் கடைபிடிக்கிறது என்றும், ஆசியாவின் அமைதிக்கு விரோதமான சதி ஒன்றில் ஈடுபடுகிறது என்றும் கூறியதாகத் தெரிகிறது.

ஜப்பானிய மக்களை இச்சதிக்கு இழுத்துச் செல்கிறார்கள் என அவர் கூறினாராம்.

சீனாவுடன் அதிக வியாபாரத் தொடர்பை ஜப்பான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், சீனாவை ஐ. நா. சபையில் சேர்ப்பதை ஆதரிக்க வேண்டுமென்றும் ஜப்பானிலுள்ள எதிர்க்கட்சியினர் கூறுகிறார்களெனவும் தெரிகிறது.

இந்தோ-சீனாவில் அமைதி ஏற்பட்ட பின்னர், உலக நிலை மிகவும் மாறிப் போயிருக்கிறது. இராணுவ பலத்தையே அடிப்படையாகக் கொண்ட அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை தோற்றுப் போய்விட்டது. சென்ற ஜூன் மாதம் இந்தியா, பர்மா, சீனா ஆகிய நாடுகளின் பிரதமர்கள் உலக அமைதி பற்றி ஐந்து அம்சங்கள் கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது மிகவும் பயனளித்திருக்கிறது என்றும் பிரிட்டிஷ் குழுவினரிடம் கூறப்பட்டதாம்!

இந்தியா, பர்மா, சீனா போன்ற நாடுகளின் பிரதமர்களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகள், ஆசியாவின் விடிவெள்ளி போன்றது என்றும், தமது கட்சியும், 'ஆசியா ஆசியர்களுக்கே' என்ற குரல் உருவெடுத்து விட்டது என்று நம்புவதாகவும், மோசபூரோ, பிரிட்டிஷ் குழுவினரிடம் கூறினாராகத் தெரிகிறது.

# தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

## ரயில்வே ஊழியர்கள், புதுக்கிராம வாசிகள் சாட்சியம்

திருநெல்வேலி, ஆக. 30—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை மீண்டும் இன்று, நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி, திரு. கே. என். ராஜரத்தின முதலியார் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ரயில்வே ஸ்டேஷன் சூப்பிரண்டெண்ட் ஜனுப் குரேஷி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“சென்ற ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி, தூத்துக்குடியிலிருந்து கோயம்புத்தூர் பாசஞ்சரில் சென்றேன்; சுமார் நான்கு இடங்களில் சங்கிலியைப் பிடித்திழுத்து, தி. மு. கழகத்தினர் ரயிலை நிறுத்தினர்; அவர்களைப் போலீசார் கைது செய்தனர்; பின்னர், ரயில், மேலூர் ஸ்டேஷனில் நிறுத்தப்பட்டது; ரயில் முன், தண்டவாளத்தில் சுமார் 20 பேர்கள் உட்கார்ந்திருந்தனர்; நான் ஸ்டேஷன் கட்டிடத்திற்குள் சென்றேன்; பின்னர் சில அம்பாக்கிக் குண்டு சத்தத்தைக் கேட்டேன்; மீளவிட்டான்—தூத்துக்குடி மார்க்கத்தில், ஒரு ரயில்வே பாலம் தீ வைக்கப்பட்டது என்று தெரிந்து கொண்டேன்; அதைப் பற்றி ரயில்வே போலீசாரிடம் புகார் தாக்கல் செய்தேன்.”

★

பின்னர் ஜேகோப் என்பவர் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

“நான், ஸ்டேஷன் சூப்பிரண்டெண்டன் தூத்துக்குடியிலிருந்து மேலூருக்கு வந்தேன்; அங்கிருந்த கூட்டத்தினர் கல்லெறிந்தபோது நான் காயமடைந்தேன்; பிறகு ரயில்வே டாக்டரிடம் சிகிச்சை பெற்றேன்.”

★

ரயில்வே கேட் கீப்பர் அந்தோணிசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“சம்பவ தினத்தன்று லெவல் கிராசிங் சமீபத்தில் கோயம்புத்தூர் பாசஞ்சர் நிறுத்தப்பட்டது; சுமார் 200 பேர்கள் தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தனர்; சிறிது நேரத்தில் கூட்டத்தினர் கற்களை எறிந்தனர்; அதனால் எனக்குச் சிறிது காயங்கள் ஏற்பட்டன; நான் உடனே கேட் கீப்பர் அறைக்குள் சென்றுவிட்டேன்; இரயில்வே கார்டு அங்கு வந்து தங்கினார்; சிறிது நேரம் கழிந்துத் அம்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது; பின்னர் கார்டு வெளியில் வந்ததும் வண்டி நகர்ந்தது.”

★

பின்னர் சாட்சியமளித்த ரிட்டயர்ட் இரயில்வே டாக்டர் டி. சவரிராஜ் கூறியதாவது:—

“நான் சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதி இரயில்வே ஜாகப், கேட் கீப்பர் அந்தோணிசாமி ஆகிய இருவருக்கும் கல்லடிபட்ட காயங்களுக்கு சிகிச்சை அளித்தேன்; காயங்களுக்கு சர்டிபிகேட்டுகள் கொடுத்தேன்.”

★

53-வது சாட்சியாக மூத்து கிருஷ்ணப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“நான், புதுக்கிராமம் பெருமாள் கோவிலுக்கு வடக்கில் வசித்தேன்; சம்பவ தினத்தன்று காலையில் சுமார் 9 மணிக்கு கம்புகளுடன் ஒரு கூட்டம் கோஷமிட்டுக் கொண்டு தெரு வழியே சென்றது; சுமார் முக்கால் மணி நேரம் சென்றதும் மற்றொரு கூட்டத்தினரும் கையில் கம்புகளுடன் வந்தனர்; அவர்கள் என் வீட்டிற்குச் சமீபம் வந்தவுடன், ஒருவர், வீட்டுக் காம்பவுண்டு கதவிலிருந்து ஒரு உருண்டை இரும்புக் கம்பியைப் பிடுங்கி எடுத்துக் கொண்டுபோய் விட்டார்.”

★

### 31—8—54 விசாரணை

ரயில்வே பர்மனன்ட் வே இன்ஸ்பெக்டர் பால்ராஜ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

“சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதி, கோயம்புத்தூர் பாசஞ்சர் ரயில் நான்கு இடங்களில் சங்கிலி பிடித்திழுத்து நிறுத்தப்பட்டது; பின்னர், வாக்குவம் பிரேக் கழற்றி விடப்பட்டு, ரயில், மேலூர் ஸ்டேஷனுக்குச் சென்றது; தண்டவாளத்தின்மேல் சுமார் 200-பேர்கள் உட்கார்ந்திருந்ததால், அங்கேயே நின்றுவிட்டது; கூட்டம் கலைய மறுத்ததால் போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தது; கூட்டத்தினர் கற்களை எறிந்தனர்; கற்கள் விழ ஆரம்பித்தவுடன், நான், ரயில்பெட்டிக்குள் சென்று ஜன்னல்களை மூடிக்கொண்டேன்; சிறிது நேரம் கழிந்துத் அம்பாக்கிக் குண்டு சத்தம் கேட்டது; பின்னர் ரயில் நகர ஆரம்பித்ததும் ஜன்னல் கதவுகளைத் திறந்தேன்; ரயில் மறுபடியும் எட்டயாபுரம் லெவல் கிராஸிங் கேட்டருகே நின்றது; அங்கும் கூட்டத்தினர் ரயிலின் மேல் கல்லெறிந்தனர்; தண்டவாளத்தின் மீது சுமார் 100 பேர்கள் உட்கார்ந்திருந்தனர்; மறுபடியும் கதவுகளை மூடிக்கொண்டேன்; சிறிது நேரம் கழித்து அம்பாக்கிச் சத்தத்தைக் கேட்டேன்; வண்டியும் நகர்ந்தது. நான், மணியாச்சியை அடைந்ததும், மீளவிட்டான் — தூத்துக்குடி ஸ்டேஷன்களுக்கிடையில் ரயில் பாலம் தீ வைக்கப்பட்டதென்று தகவல் கிடைத்தது; விசேஷ என்ஜின் ஒன்றில் அந்தஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தேன்; பாலத்தில் இரண்டு மரஸ்லீப்பர் கட்டைகள் எரிந்திருந்தன; மரத்திலான 19 ஆணிகள் தண்டவாளத்தில் காணவில்லை; பின்னர், காங்கிக் கூலிகளால் அவைகள் தேடிக் கண்டு பிடிக்கப்பட்டன.”

★

பின்னர், இரயில்வே கார்டு கே. எஸ். குழந்தை விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதி கோயம்புத்தூர் பாசஞ்சரில் சென்றேன். மேலூர் ஸ்டேஷனில், தண்டவாளத்தின் மேல் சுமார் 200 பேர்கள் உட்கார்ந்திருந்தனர்; 5-வது எதிரி நடராஜன், அவர்களுக்குத் தலைமையாக இருந்தார். (சாட்சி, 5-வது எதிரியை அடையாளம் கண்டு பிடித்தார்); நானும், போலீஸ் அதிகாரிகளுடன் சேர்ந்து கூட்டத்தினரைக் கலைந்து போகும்படி கேட்டுக்கொண்டேன்.”

சாட்சி, அம்பாக்கிப் பிரயோகம் நடந்த விவரங்களை விவரித்து விட்டு, மேலும் கூறியதாவது:—

“இரயில் வண்டி, மேலூர் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு கிராஸிங்கிற்கு அருகில் நின்றது; தண்டவாளத்தில் சுமார் 100 பேர்கள் வரை உட்கார்ந்திருந்தனர்; போலீசார் தடியடிப் பிரயோகம் செய்த பின்னர் கூட்டத்தினர் இரயில் மேல் கல்லெறிந்தனர்; நான், கேட்கீப்பரின் அறைக்குள் புகுந்து கொண்டு கதவை மூடிவிட்டேன்; சிறிது நேரம் கழித்து அம்பாக்கிச் சப்தம் கேட்டது; பின்னர், கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்ததும் இரயில் புறப்பட்டுச் சென்றது; கல்லெறிந்ததால் என்ஜின் கண்ணாடிகளும், மற்றும் மூன்று ஜன்னல் கண்ணாடிகளும் உடைந்துவிட்டது.”

எதிர்தரப்பு வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் சாட்சி கூறியதாவது:—

“5-வது எதிரி நடராஜனை சம்பவத் தினத்திற்கு முன்பு பார்த்ததில்லை; கூட்டத்தினர் கல்லெறிந்ததற்கு, தண்டவாளத்தின்மேல் உட்கார்ந்திருந்தவர்கள்தான் தூண்டிவிட்டனர் என்று என்னால் சொல்ல முடியாது.”

★

புதுக் கிராமத்தில் வசித்து வந்த சுப்பய்யர், சுப்ராமய்யர் ஆகியோர்கள் சாட்சியமளிக்கையில், சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதி, கூட்டத்தினரால், தங்கள் வீடுகளில் கற்கள் எறியப்பட்டனவென்று கூறினர்.

★

பின்னர் ராமகிருஷ்ணய்யர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

“நான் ஒரு மஞ்சு வியாபாரி; சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ம் தேதி காலையில், சுமார் 30 பேர்கள் கொண்ட கூட்டத்தினர், தெருவில் கம்புகளுடன் வந்தனர்; கூட்டத்தினரைக் கண்டவுடன் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே சென்றுவிட்டேன்; சிறிது நேரம் கழித்துக் கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தபோது என்னுடைய ஷெட்டில் நின்றுகொண்டிருந்த காரின் கண்ணாடிகள் சேதமடைந்திருந்ததையும், எலக்ட்ரிக் பல்புகள் உடைந்திருந்ததையும் கண்டேன்.”

★

### 2—9—54 விசாரணை

திருநெல்வேலி, செப். 2—

இன்று, மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பப்ளிக் பிராசிக்யூட்டர் பி. எஸ். சுப்பிரமணிய பிள்ளையின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் வே. எஸ். மகாலிங்கய்யர் கூறியதாவது:—

“நான் தூத்துக்குடி ஹார்வி மில்லில் உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்றவன்; புதுக் கிராமம் பெருமாள் கோவிலுக்குத் தெற்கில் உள்ள ஒற்றை வரிசையான தெருவில் என் வீடு கிழக்கும் பார்த்தது; ஜூலை மாதம் 15-ம் தேதி காலையில் வீட்டிலிருக்கும்போது, தெருவில் பலத்த சப்தம் கேட்டது; வெளியே வந்து பார்க்கையில் சுமார் 30 பேர்கள் கொண்ட கூட்டம், கம்புகளுடன் தெருவில் வருவதைப் பார்த்தேன்; அவர்களை அதே தெருவிலுள்ள சீனிவாசய்யங்கார் வீட்டிற்குள் நுழைவதைப் பார்த்தேன்; வீட்டினுள் சாமான்கள் சேதப்படுத்தப்படும் சப்தத்தைக் கேட்டேன். பிறகு கூட்டத்தினர் வெளியே வந்து மேற்கு நோக்கிச் சென்றனர்; ராமகிருஷ்ணய்யர் வீட்டு வெளிக்கதவையும், மோட்டார் ஷெட்டையும் சேதப்படுத்தினர்; மீண்டும் கூட்டம் தெரு வழியே மேலே செல்கையில், கிளர் சாமி குளத்து அய்யர் வீட்டினுள் சென்றதைப் பார்த்தேன்; எங்கிருந்தோ போலீஸ் ஊதுகுழல் சத்தம் கேட்டவுடன் தெருவிலிருந்த கூட்டத்தினர் ஓடிவிட்டனர்; தெருவில் கூட்டத்தினர் கும்பலாக உள்ளெண்ணிக் கொண்டு செல்லுகையில் ஒரு சைக்கிளில் ஒரு நபர் அங்குமிங்கும் போய்க் கொண்டும், கூட்டத்தினரிடம் பேசிக் கொண்டும் இருந்தார்.”

சைக்கிளில் சென்றதாகக் கூறப்படும் நபரை அடையாளம் கண்டுபிடிக்கும்படி கேட்டதில், சாட்சியால் முடியவில்லை.

எதிர் தரப்பு வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமியின் குறுக்கு விசாரணையின்போது, சாட்சி, சம்பவ தினத்தன்று சைக்கிளில் போன நபரை அதற்கு முன்பு தாம் பார்த்ததில்லை என்றார்.

★

பின்னர், சங்கரநாராயணன் என்ற இளைஞர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“நான், புதுக் கிராமத்தில் பெருமாள் கோவிலுக்கு வடபுறமிருந்த வீட்டில் வசித்தேன்; சம்பவ தினத்தன்று நான் கோவில் வாசலருகில் வந்து கொண்டிருக்கும்போது தெற்கிலிருந்து கம்பு, விறகு கட்டைகள், அரிவாள் முதலியவைகளைக் கொண்டு சுமார் 50 பேர்கள் கொண்ட கூட்டம் ஓடி வந்தது; உடனே நான், வீட்டிற்கு விரைந்து சென்று உள்ளிருந்த பெண்களை எச்சரித்துவிட்டு கதவுகளை மூடிக்கொண்டு வாயிற்படி முன்பு நின்றுகொண்டிருந்தேன்; சுமார் 15 பேர்கள் கம்பு, அரிவாள் சகிதம் என்னை நோக்கி ஓடிவந்தனர்; என்னைச் சூழ்ந்து கொண்டு கம்பால் தாக்கினர்; அடிகளைத் தடுக்க முயற்சி செய்ததால் அநேக காயங்கள் ஏற்பட்டன; கூட்டத்தில் ஒருவன் என்னை அரிவாளால் வெட்ட முயற்சித்ததால் வலது கையால் தடுத்தபோது காயம்பட்டது; அதுபோல் மற்றொரு தரமும் அரிவாள் வீச்சைத் தடுத்ததால் இடது கையிலும் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டது; மேலும் காயங்கள் உண்டாகுமென்ற பயத்தால் நான் காம்பவுண்டு சுவரேறிக் குதித்து, தெருவில் கிழக்கே ஓடி, ஒரு சந்தில் நுழைந்து, என் வீட்டின் பின்புறம் வந்தேன்; வழியில் உள்ள ஒரு எண்ணெய்க் கடையருகில் மாரிமுத்துத் தேவரைச் சந்தித்தேன்; அவரிடம் காயங்களைக் காட்டினேன்; மாரிமுத்து தேவர் அவைகளைக் கட்டி, என் வீட்டுப் பின்புறம் வரையில் கூடவந்தார்; பின்புறம் வழியாக வீட்டினுள் சென்றேன்; பிறகு ஆஸ்பத்திரிக்குச் சென்று சிகிச்சை பெற்று தெற்கு போலீஸ் ஸ்டேஷனில் புகார் செய்தேன்.”

கோர்ட்டில் சாட்சி 46, 47, 48, 49-வது எதிரிகளை அடையாளங் காட்டி தன்னைத் தாக்கிய கூட்டத்தாரிடையே அவர்கள் இருந்ததாகக் கூறினார்.

பி. ஏ. தங்கசாமி சாட்சியை குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“என்னை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என் வீட்டில்தான் விசாரித்தார்; தெற்கு போலீஸ் ஸ்டேஷனில் விசாரிக்கவில்லை; சாட்சி நயினார் பண்ணையாரை அவர் கூட்டுறவு ஸ்டோரில் வேலை பார்க்கையில் எனக்குத் தெரியும்; நான் அடையாளம் காட்டிய எதிரிகளை சம்பவ தினத்திற்கு முன் பார்த்ததில்லை; சப். மாஜிஸ்திரேட்டால் அடையாள அணிவகுப்பு சுமார் ஒன்றரை மாதங்களுக்குப் பின் நடத்தப்பட்டது: ரத்தக்கறை படிந்த சட்டை, வேஷ்டி, துண்டு ஆகியவற்றைப் போலீசாரிடம் கொடுக்கவில்லை.”

---

“ஒரு நாட்டின் உயர்வு, அதன் பாமர மக்களின் உயர்வையே பொறுத்திருக்கிறது.”
—உட்ரோ வில்சன்

---

## இராணுவ உத்தரவுகள்

### இனி இந்தியில் பிறப்பிக்கப்படும்

புதுடில்லி, செப். 7—

இந்திய இராணுவ அணிவகுப்புகளில் நடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாகவே, உத்தரவுகள் ஆங்கில மொழியிலேயே பிறப்பிக்கப்பட்டு வந்தன. அந்த நிலையை அடியோடு அகற்றிவிட்டு, இனி இராணுவ உத்தரவுகள் அத்தனையும் இந்தி மொழியில்தான் இருக்குமென்றும், இதற்காக ஆயிரக்கணக்கான தொழில் நுட்பச் சொற்கள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டதென்றும், இராணுவத்தில் சேவை செய்யும் அதிகாரிகளில் 100-க்கு 95 சதவிகிதத்தினர் இந்தி கற்றுக்கொண்டு விட்டனர் என்றும், இராணுவத்தில் இந்தி மொழி தேவநாகிரி லிபியிலேயே கற்றுத் தரப்படுவதாயும், ரோமன் லிபியில் கற்றுத்தரப்படவில்லை யென்றும், கடந்த 18 மாதங்களில் எல்லா ராணுவ வீரர்களும் தேவநாகிரிலிபியைக் கற்றுக்கொண்டு விட்டதாயும், டில்லி உதவி பாதுகாப்பு மந்திரி மஹாவீர் தியாகி கூறினார்.

---

## அன்பளிப்பு

★

28-8-54-ந் தேதி தொடங்கி, 5—9—54-ந் தேதியுடன் முடிவடைந்த அண்ணா அவர்களின் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளின் போது, ஆங்காங்கு ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்காக அன்பளிப்பளித்து ஊக்குவித்த கீழ்க்கண்ட தோழர்களுக்கும், தி. மு. கழகங்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்:—

| | |
|---|---|
| திருச்சி-பீடி கம்பெனித் தோழர்கள் | 1—1—0 |
| துறையூர் பொதுக் கூட்டத்தில் காலணா மாலை | 1—4—0 |
| சிங்காரத்தபுரம் தி.மு. கழகம் | 5—0—0 |
| மேற்படியூர் தோழர் கோவிந்தன் புதல்விகளுக்கு மஞ்சளா— திலகா பெயர் சூட்டியதில் | 2—0—0 |
| கொரடாச்சேரி பொதுக்கூட்டத்தில் ஒரு குழந்தைக்கு குமாரி என பெயர் சூட்டியதில் | 1—0—0 |
| மேற்படியூர் பொதுக் கூட்டத்தில் காலணா முடிப்பாக (2 முடிப்புகள்) | 3-15—0 |
| நாகை பொதுக்கூட்டத்தில் அப்பகல் ஊர் தி. மு. கழகம் 1 அணா முடிப்பாக | 6—5—0 |
| ஆகமொத்தம் ரூ. | 20—9—0 |

—வெளியீட்டாளர்.

---

## எங்கள் நன்றி

30—8—54 அன்று முசிறி அபித குஞ்சாரயக்கன் பாளையத்தில் நடைபெற்ற எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை தலைமை ஏற்று நடத்தி வைத்த தி. மு கழகப் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களுக்கும். திருமணத்தின்போது கருத்துரை வழங்கிய தோழர்கள் அ பொன்னம்பலனார், முசிறி ஆர். எஸ். பாண்டியன், வீ. மாரக்கசம் ஆகியோருக்கும் வாழ்த்து இதழ்கள் வாசித்தளித்தும், பரிசுகள் வழங்கவும் செய்த நண்பர்களுக்கும், வருகை தந்து சிறப்பித்த உறவினர்கள், பெரியோர்கள், நண்பர்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நடராசமி
—சாரதாமணி

# சீன அரசியல் அமைப்பு

## நிர்வாகக் குழு ஒப்புக்கொண்டது

ஹாங்காங், செப். 9—

கம்யூனிஸ்டு சீனாவின் புதிய அரசியல் திட்டத்தை சீனாவின் உயர்தர நிர்வாகக் குழு ஒப்புக் கொண்டுவிட்டது. இந்த அரசியல் அமைப்பு சீனாவில் உள்ள சிறுபான்மை தேசீய இனங்களுக்குப் பூரண சுயாட்சியுரிமை அளிக்கிறதாம்; ஆனால், 'பீப்பிள்ஸ் காங்கிரஸ்' என்று அழைக்கப்படும் சீனப் பாராளுமன்றம்தான், நாட்டின் சட்டங்களை நிறைவேற்ற உரிமை கொண்டது என்று அரசியல் அமைப்பில் காணப்படுகிறது.

சீனப் பாராளு மன்றம் ஆண்டுக்கு ஒருமுறை கூடும் என்று தெரிகிறது.

## கம்யூனிஸ்டு சீனப் பகுதிகள்மீது தாக்குதல்

### 100 தேசீய விமானங்கள் பங்கு கொண்டனவாம்!

தைபே, செப். 8—

கம்யூனிஸ்டு சீனாவின் பிரதான பகுதிகள்மீது தேசீய சீனத் தரப்பினர் 100 விமானங்களைக் கொண்டு குண்டு வீசியதாயும், அமாய் துறைமுகத்தில் கம்யூனிஸ்டுகள் வைத்திருந்த காவல் புரியும் துப்பாக்கிகளை செயலற்றதாக ஆக்கிவிட்டதாயும், சியாங் 'சர்க்கார்' அறிக்கை ஒன்று கூறுவதாகத் தெரிகிறது.

தேசீய விமானங்கள் மூன்று சுட்டு வீழ்த்தப்பட்ட தாயும், 20-க்கு மேலான விமானங்கள் சேதப்படுத்தப் பட்டனவென்றும் கூறிய கம்யூனிஸ்டு சீன அறிக்கையை தேசீய 'சர்க்கார்' மறுத்தனர் என்றும் தெரிகிறது.

## பாங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்

### நவம்பர் 15-ல் துவங்கும்

நாகபுரி, செப். 9—

இந்தியா முழுமையும் இந்திங்கள் 23-ந் தேதியன்று பாங்கி சிப்பந்திகள் ஒரு நாளைய கண்டன வேலைநிறுத்தம் செய்வார்கள் என்று தெரிகிறது.

அகில இந்திய பாங்கி ஊழியர்களின் மத்திய நிர்வாகக் குழுவில் இம்மாதிரி தீர்மானிக்கப்பட்டது.

நவம்பர் 15-ந் தேதியன்று பொது வேலைநிறுத்தம் நடைபெற வேண்டுமென்று குழுவில் தீர்மானம் ஒன்று நிறைவேறியிருக்கிறது.

இன்று இரவு நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில், பினய்ராய், யாருடைய தீர்ப்பையும் பொருட்படுத்தாமல் முன் சென்ல தீர்மானித்திருப்பதாகவும், இதைக் கடும் எச்சரிக்கையாக சர்க்கார் கருத வேண்டுமென்றும் கூறினர்.

## சூ—யென்—லாய்

### சீனாவின் மிகப் பெரிய எதிரியாம்!

#### சியாங்கின் துண்டுப் பிரசுரம்

தைப்பே, செப். 10—

தேசீய சீனாவின் 'பி 25' போர் விமானங்கள், கம்யூனிஸ்டுகளின் நகரமான ஷாங்காய், காண்டன் ஆகிய நகரங்களின் மீது பறந்து, 'சீனாவின் முதல் தரக் குற்றவாளி சூ—என்—லாய் ஆவார்' என்று அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களைக் கீழே போட்டனவென்று தெரிகிறது.

# திருமணங்கள்

★

11—9—54 காலை 9 மணிக்கு எண். 16, மைலாப்பூரான் தெரு, இராயப்பேட்டை, சென்னையில் தோழர் கோவிந்தசாமி—தோழியர் சரோசா இருவரின் திருமணம், தோழர் மு. புரட்சிமணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், என். என். தென்னரசு ஆகியோர் பேசுவர்.

* * *

12—9—54 காலை 8 மணிக்கு மேல் சென்னை, தங்கசாலை எண். 148-ல், தோழர் பி. ஆர். துரைராசன்—தோழியர் சாவித்திரி சீர்திருத்த மணம் தோழர் டி. சண்முகம், எம். எல். ஏ., தலைமையில், தோழர் கே. கே. நீலமேகம் நடத்திவைப்பார்; தோழர் ஆர். கணேசன்—தோழியர் ஜெகதாம்பாள் கலப்பு மணம் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை நடத்திவைப்பார்.

* * *

12—9—54 காலை 9 மணிக்கு சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, எண். 51, சின்னண்ண செட்டி தெருவில் தோழர் ஆ. கோவிந்தராசன்—தோழியர் சரோசா திருமணம் தோழியர் என். தருமாம்பாள் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் கா. அப்பாதுரை, என். வி. நடராசன், கண்ணதாசன் ஆகியோர் பேசுவர்.

* * *

12—9—54 காலை 9 மணிக்கு சென்னை, தைப்பமுதலி தெரு, எண். 83-ல் தோழர் வி. கோபால்—தோழியர் பு. தனம் (கன்னியாய்) திருமணம் தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெறும்.

* * *

12—9—54 காலை 8 மணிக்கு சென்னை, குளா, சாமி பிள்ளை தெரு, எண். 5-ல், தோழர் ஆர். சின்னசாமி—தோழியர் ஜி. கிருட்டிணவேணி திருமணம் தோழியர் பூங்கோதை தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், வைதை சம்பந்தம், அ. ச. நடராசன் ஆகியோர் பேசுவர்.

* * *

12—9—54 மாலை 5½ மணிக்கு ஆரணவாடி, தாராவி, பம்பாயில் தோழர் எல். செல்லச்செழியன்—தோழியர் செல்வமணி திருமணம் தோழர் ம. இரா. ஏ. ரெத்தினசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் பொ. தொல்காப்பியன், ச. வள்ளியப்பன், மா. இரா. குறள்தாசன் ஆகியோர் பேசுவர்.

* * *

12—9—54 காலை 9 மணிக்கு வாணியம்பாடி, புதூர்ப் கோட்டையில் தோழர க. செல்வராசு—தோழியர் சாந்தா திருமணம் தோழர் பி. டி. இராசன், எம். எல். ஏ., நடத்திவைப்பார்.

* * *

12—9—54 காலை 9 மணிக்கு பொன்மலைப்பட்டி டாக்டர் பி. என். பி. நாயுடு இல்லத்தில் தோழர் சி. ராமையன்—தோழியர் தாயம்மாள் சீர்திருத்தத் திருமணம் தோழர் அம்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முகவை ஆர். என். பாண்டியன், ஜி. பராங்குசம் ஏ. கோவிந்தசாமி ஆகியோர் பேசுவர்.

* * *

12—9—54 காலை 9½ மணிக்கு செய்யார் வட்டம் திருவத்திபுரம் பெரியத் தெரு, எண் 13-ல் தோழர் ஈ. நடேசன்—தோழியர் ஜெயலட்சுமி, தோழர் ஈ. சண்முகம்—தோழியர் சரோசா திருமணங்கள் தோழர் டி. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி—கல்யாணசுந்தரம், போளூர் சுப்பிரமணியம், ஏ. எஸ். கிருஷ்ணசாமி மற்றும் பலர் பேசுவர்.

* * *

12—9—54 காலை 9 மணிக்கு கொடிக்கால், போலா வீதியில் தோழர் மா. சோமன்—தோழியர் சரோசா திருமணம் நடைபெறும். தோழர்கள் திருக்குறள் வீ. முனுசாமி, எம். பி., ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., வை. சம்பந்தம் ஆகியோர் பேசுவர்.

# கழகக் கூட்டங்கள்

★

### பொன்மலைப்பட்டி

கழக காரியாலயத்திற்குமுன்

12—9—54 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

முகவை ஆர். என். பாண்டியன்

★

### குள்ளக்காபாளையம்

12—9—54 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:

கோபி ஜி. என். ராஜூ

அ. ச. பாலு

எம். ஜி. சீதரன்

## சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

★

12—9—54 காலை 10 மணியளவில், மதுரை மீனாட்சி டாக்கீஸில் சிங்காரவேலர் நினைவுப் படிப்பக நிதிக்காக தோழர் ஈ. வெ. கி. சம்பத் 'விடுதலை விழா' என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். தோழியர் எம். பி. ஏ. இலட்சுமி குழுவினரால் இன்னிசையும் நடைபெறும். தோழர் என். முத்துவும் கலந்துகொள்வார். நன்கொடை: அணா 8, 4

## திருவள்ளுவர் மன்ற முதலாண்டு நிறைவுவிழா

12—9—54 மாலை 4 மணிக்கு பொன்னேரி வட்டம், மெதூர், செருப்புத் திடலில் தோழர் கிருட்டிணன் தலைமையில் திருவள்ளுவர் மன்ற முதலாண்டு நிறைவு விழா நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், பி. எல். மணி, எம். தெய்வசிகாமணி ஆகியோர் பேசுவர்.

## தி. நா. தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் கமிட்டிக் கூட்டம்

12—9—54 மாலை 2 மணிக்கு செங்கற்பட்டு நகர முனிசிபல் 'டிராவலர்ஸ் பங்களா'வில் தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கிய காரியங்கள் பற்றி ஆலோசிக்கப்படும்.

## இந்திய-சீன நட்புறவுக் கழக மாநாடு

12—9—54 அன்று சென்னை, செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் இந்திய-சீன நட்புறவுக் கழக மாநாடு தோழர் டி. எம். கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும். இந்தியாவிலுள்ள மக்கள் சீனக் குடியரசின் தூதுவர் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைப்பார். மாநாட்டின்போது மியூசியம் தியேட்டரில் கலைக்காட்சிபொருளை தோழர் பி. வி. ராஜமன்னார் திறந்துவைப்பார்.

## சீர்திருத்த சங்கத் தேர்தல்

12—9—54 காலை 10 மணியளவில், சென்னை, சிங்கர்ஸ் தெரு 1-வது, 2-வது வீதியில் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்த சங்கத்தின் உறுப்பினர் தேர்தல் நடைபெறும்.


# திருமண அழைப்பு மலர்

பேரன்புடையீர்,

வணக்கம், 12—9—54 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குமேல் 10-30 மணிக்குள்,

சீர்திருத்த மணம்

பி. ஆர். துரைராஜன் — சாவித்திரி அம்மாள்

கலப்பு மணம்

ஆர். கணேசன் — ஜெகதாம்பாள்

சென்னை, சௌகார்பேட்டை, தங்கசாலை தெரு, எண். 148-ல், திரு. டி. ஷண்முகம், எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் முதலாவது திரு. கே. கே. நீலமேகம் அவர்கள் சீர்திருத்த திருமணத்தையும், திரு. சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் கலப்பு திருமணத்தையும் நடத்திவைப்பார்கள். மாலை 6 மணிக்கு இசைமுரசு நாகூர் ஈ. எம். ஹனீபா அவர்களால் இன்னிசை நடைபெறும். தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து மணமக்களை நாமணக்க வாழ்த்தியருள வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தங்கள் அன்பன்,

ஆர். லோகநாதன்.


# மத சார்பற்ற அரசாங்கம் இயங்குகிறதாம்!

## ஆனால், அமைச்சர் இந்து சமயத்தை ஆதரித்துப் பேசுகிறார்!

மாயவரம், செப் 8—

தருமபுரத்தில் ஆவணி மூலத் திருநாள் வேலைக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில், சென்னை நிதிமந்திரி சுப்பிரமணியம் பேசியதாவது:—

"இந்த நாட்டில் பல மதங்கள், தொன்றுதொட்டு இருந்து வருகின்றன; சமயச் சார்பற்ற அரசாங்கம் இப்போது நடைபெற்று வருகின்றது; அரசாங்கத்துக்கும் சமயத்துக்கும் உள்ள சம்பந்தம் என்ன என்று கேட்கிறார்கள்; எல்லா சமயத்தினர்களுக்கும் பொதுவாக நல்ல முறையில் அரசாங்கம் உருவாகி இயங்க வேண்டும்; சமயம் இல்லை என்றால் சமுதாயம் வாழ முடியாது; நாட்டின் நல்வாழ்விற்கு அன்பு வளர வேண்டும்; தழைத்து ஓங்க வேண்டும். ஆதீனங்கள் கடமையாகக் கொண்டு இதற்குப் பாடுபட வேண்டும்."

தமிழ் மொழி பற்றிப் பேசுகையில் நிதி மந்திரி பேசியதாவது:—

"தமிழ் பலவீனமான மொழி அல்ல; வடமொழிகளைக் கற்பதால் தமிழ் வளர்ச்சி குன்றி விடாது தமிழ் தளர்ச்சியடையாது, மேன்மேலும் வளரக் கூடிய ஒரு மொழி; நமக்குப் பிற மொழிகள் மீது துவேஷம் வேண்டாம்; தமிழில் நம்பிக்கை இல்லாதவர்தான், தமிழின் பெருமை அறியாதவர்தான், தமிழை உண்மையாக உணராதவர்தான், பிறமொழிகளை வெறுப்பர்; அல்லது, எதிர்ப்பர்.

வடமொழியில் அரும்பெரும் பொக்கிஷங்கள் உள்ளன; சமஸ்கிருத பதங்களை உபயோகிப்பதால் தமிழிற்கு தாழ்வு ஏற்பட்டு விடாது.

கல்விகற்கும் மாணவர்கள் ஒருமன நோக்குடன் கல்வி பயில வேண்டும். மாணவர்கள் பிரம்மச்சாரிகளாகவும், தெய்வ நம்பிக்கை மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும்."

★

சென்னை, செப் 9—

சுவாமி சிவானந்தரின் 68-வது பிறந்தநாள் விழா நேற்று லிங்கிசெட்டித் தெருவில் நடைபெற்றபோது, விழாவிற்குத் தலைமை தாங்கிய நிதிமந்திரி சுப்பிரமணியம் தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:—

"சுவாமி சிவானந்தர் ஒரு மகா புருஷர்; அவர் தென்னிந்தியராக இருந்தும், வட இந்திய க்ஷேத்திரமாகிய ரிஷிகேசத்தில் வசிப்பதிலிருந்து தென்னிந்திய — வடஇந்திய ஐக்கியம் அதிகமாக இருப்பது விளங்குகிறது; மேலும், கடவுள் பக்தி நமக்கு அதிகம் வேண்டும்; மகாத்மா காந்தியின் பெருமை அவரது கடவுள் பக்தியால்தான் அதிகரித்தது."

## கோவா பிரச்சினை

### வல்லரசுகள் தலையிடாதாம்!

வாஷிங்டன், செப். 10—

பிரிட்டன், கனடா அமெரிக்கா ஆகிய நாடுகள் போர்ச்சுகீசிய இந்தியப் பிரச்சினையில் இனிமேல் தலையிடமாட்டார்கள் என்று தெரிகிறது.

வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் வருங்கால போர்ச்சுகல் கேட்டுக்கொண்டால் ஒழியத் தலையிடமாட்டார்களாம்!

## கட்டாயமாக ......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திற உண்மையான திட்டங்கள் தான் எனக்குப் படுகின்றன," என்றும் கூறினதாக அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

"ஒரே கட்சி மட்டுமே ஆட்சி செலுத்துகிறது என்பதே ஜனநாயகத்தைக் கொன்றுவிடுவதாகும்;

"இன்னும் தொடர்ந்து நாட்டைத் தொழில் மயமாக்குவதும், தொழில்களை விரிவுபடுத்துவதும் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதைக் கடினமாக்கும். இதுதான் இன்று ரஷ்யாவை எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினையாகும்;

"சிறு தனது உற்பத்திப் பொருள்களை ரஷ்யாவுக்குமட்டும் தர விரும்பவில்லை. அதற்கு வெளிநாடுகளில் ஒரு 'பெரும் மார்க்கெட்' தேவைப்படுகிறது." என்றும் தோழர் ஸவான் கூறியதாகத் தெரிகிறது.

சென்னை, ஆயிரம்விளக்கு [illegible] அச்சகத்தில் [illegible] அச்சிட்டு [illegible] வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.